[15th December 1961

SRI M. S. SELVARAJAN : சிறிய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு அடிப்படையாக என்னென்ன அம்சங்கள் பூர்த்தி செய்யப்படவேண்டும். குலசேகரப்பட்டனம், காயல் பட்டணம் பூர்வாங்க வேலை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : Kayalpattinam port in Trichendur taluk is no longer in existence.
ஆகவே, முதலில் குலசேகரப்பட்டணம்தான், அதைத்தான் இம்ப் ருவ் செய்ய ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறோம். பின்னால் உள்ள நிலைமைக்குத் தக்கபடி செய்யப்படும்.

Government Hospital, Tiruvannamalai

*2370 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri P. U. SHANMUGAM) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருவண்ணாமலை சர்க்கார் மருத்துவ மனையில் அதிகப்படி யான கட்டிடம் கட்டும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI S. M. ANNAMALAI : எவ்வளவு தொகையில் என் னென்ன கட்டிடங்கள் கட்டப்படும் ?

SRI M. A. MANICKAVELU : டீ.பி. க்ளினிக் 1,36,000 ரூபாய் எஸ்டிமேட்டில் கட்டவும், கண், மூக்கு, தொண்டை அதற்காக 1.25 லட்சத்தில் கட்டிடம், பல் சிகிச்சைக்காக 90,000-ல் இவை யெல்லாம் கட்ட ஏற்பாடு இருக்கிறது அதற்கு அட்வகேட் திரு. வீரராகவன் என்பவர் ஒருவர் 10,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். அதையும் பயன்படுத்தி இந்த வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. கட்ட முடியுமா ?

SRI K. VINAYAKAM : அரசியல் காரணமாக மூளை கோளா றாகப் போகிறதே, அப்பேர்ப்பட்ட மூளைகளை திருத்தியமைக்க ஏதாவது சிகிச்சை சாலையை திருவண்ணாமலை ஆஸ்பத்திரியில் கட்ட முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எட்டு லட்சம் ரூபாய் செலவில் ஏலகிரி மலைக்கு ரோடு போட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட குளிர்ச்சியான இடங்களுக்குப் போனால் மூளைக்கு சாந்தி கிடைக்கும்.

Central Road Fund

*2371 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI T. K. SUBBIAH): கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டுக்கு முதல் ஐந்தாண்டு, இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களுக்கு சென்ட்ரல் ரோடு பண்டிலிருந்து முறையே கிடைத்த தொகை எவ்வளவு ?